# தமிழண்ணல்
# தமிழுக்குத் தந்த சீர்வரிசை

தமிழண்ணல்

மீனாட்சி புத்தக நிலையம்

## 10. சிவவழிபாட்டின் தொடக்கம் - தமிழ் நான்மறை விளக்கம்

சிவவழிபாடே தொன்மை மிக்க வழிபாடு – பிற யாவும் அதிலிருந்து கிளைத்தவையே.

தொல் பழங்கால மானுடவியலின் படி, அக்கால மக்கள் மரங்களைத் தெய்வங்களென வழிபட்டனர். சிவ வழிபாடு அதனுடன் தொடர்புடையது.

குடிசைகள் நிறைந்த சிற்றூர்களின் நடுவே ஒரு சதுக்கம் இருக்கும். அதன் நடுவே ஆல், அரசு போல ஒரு மரம் இருக்கும். அதனை வழிபடுவர், மரம் இல்லாத போது மரத்தறி ஒன்றை வைத்து வழிபட்டனர். அச்சதுக்கமே வழிபடுமிடம், நீதிமன்றம், ஊராட்சி மையம் அதை மன்றம் பொது இல், அம்பலம் என அழைத்தனர். அதுவே இன்றும் கோயில்களுக்குப் பெயராக இட்டு வழங்கப்படுகிறது. அம்மரத்தறியே அருஉருவமாகக் கருதப்பட்டு, சிவவழிபாடு என வளர்ந்தது.

தறியை நட்டு, அது அசையாமல் இருக்க அதனைச் சுற்றி அணைகட்டினர். அது சிவலிங்க வழிபாடாக இன்று வளர்ந்துளது. அப்பர் பாடற்சான்றும் தந்து இது விளக்கப்பட்டுளது. 'கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே' என்பது அவர் வாக்கு.

வடமொழி வேதம் வேறு, தமிழ் நான் மறை வேறு. வடமொழி வேதங்கள் தமிழில் மொழியாக்கம் செய்து வந்துள்ளன. அவை கருப்பு இனத்தவரோடு, ஆரியர்கள் போரிட்டு, தங்களைக் காப்பாற்றும் படியும் உதவும் படியும் தேவதைகளிடம் முறையிட்டு புலம்புவனவாகவே உள்ளன. தமிழ் நான்மறை வேறு. இது சிவபெருமான் அருளியது; மெய்ப்பொருள் விளக்கம் கொண்டது.

# தமிழண்ணல்
# தமிழுக்குத் தந்த சீர்வரிசை

தமிழண்ணல்

**மீனாட்சி புத்தக நிலையம்**
48, மயூரா வளாகம், தானப்ப முதலி தெரு,
மதுரை - 625 001.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2046, ஆடி, ஆகஸ்டு, 2015
**விலை.ரூ.30/-**

## நூல் விவரப்பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழண்ணல் தமிழுக்குத் தந்த சீர்வரிசை |
| பதிப்பாசிரியர்கள் | : | பேரா.இரா.மோகன், |
| | | பேரா.உல.பாலசுப்பிரமணியன், பி.வரதராசன் |
| நூலின் தன்மை | : | வாழ்க்கை விவரக் குறிப்பு |
| விலை | : | ரூ. **30.00** |
| பக்கங்கள் | : | 48 |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| நூல் அளவு | : | 14 X 22 செ.மீ. டெம்மி |
| பைண்டிங் | : | அட்டைக் கட்டு |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| வெளியீடு | : | சிந்தாமணிச் செல்வ வெளியீடு |
| ஒளி அச்சு | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| அச்சிட்டோர் | : | கணபதி எண்டர்பிரைசஸ், சென்னை-5 |

**MEENAKSHI PUTHAKA NILAYAM**
Mayura Complex, 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi : 2560517
E-Mail: meenakshiputhakam@hotmail.com

மீனாட்சி
புத்தக நிலையம்

# மனம் திறந்து ஒரு மடல்

அன்புடையீர்,

வணக்கம்.

இதனுடன் தமிழுக்கு நான் தந்த சீர்வரிசை பற்றிய சிறு நூலை அனுப்பியுள்ளேன். மிகுந்த தயக்கத்துடன் இதனை எழுதினேன்.

நல்லனவற்றைச் சொல்லாது விடுதலும் தவறு; நல்லதல்லாத வற்றைச் சொல்லிப் புகழ் தேடுவதும் தவறு அல்லவா?

யான் எழுதிய முழுமையில் ஒரு பகுதியைத்தான் அதுவும் தேர்ந்தெடுத்து, இளம் ஆய்வாளர்க்கு வழிகாட்டக்கூடும் என்பதால் எழுத முற்பட்டேன். இவை புதிதாய்க் கண்டதும் புதிய பார்வையும் உடையன. யான் கடந்த அறுபது ஆண்டுகளில் தமிழைக் கற்று, பழகி, எழுதிய அனைத்தையும் எல்லோரும் அறிந்திருத்தல் இயலாது. ஒரு பகுதியை அறிந்தவர்க்கும் பிறபகுதிகள் தெரியாது. அவர்களுக்கு இது ஓர் அறிமுகமாகும்.

பிறந்து வளர்ந்து மொழி பயின்ற காலம் முதல் தமிழுடன் ஒன்றிப் போனவன் நான். என் தமிழ்க் கல்வி எனக்கு மகிழ்ச்சி தந்தது; வாழ்வு தந்தது. அதுவே தாய் எனக்குத் தந்த சீர் எனலாம்.

பாராட்டை நான் எதிர்பார்த்ததில்லை; பதவிகளை நான் தேடிப் போனதில்லை.

நான் தமிழைப் படித்தேன்; எழுதினேன். இவை என் மகிழ்ச்சிக்கு உதவின; துன்பத்தை, இடர்களைத் தாங்கும் மன உரம் தந்தன.

பலர் முழுமையாய்த் தம்மைத் தமிழுக்கு ஒப்படைப்பதில்லை. மனம் திறந்து சொல்வதானால், நான் தமிழைக் கற்று எழுதிக் கொண்டு இருந்தேன். அதனால் துன்பங்கள் என்னை ஒன்றும் செய்யவில்லை; செய்ய முடியவில்லை.

உண்மையாய் ஒருவன் உழைத்தபடி இருந்தால் உதவிகளும் பதவிகளும் தேடிவரும் என்பதை என் வாழ்வில் கண்டவன் நான்.

நழுவலும் வழுவலும் அறியாதவன் நான். நெளிவு சுளிவு தெரியாதவன். யாரையும் வீணாகத் தன்னலம் கருதிப் புகழ்ந்தறியேன்.

எனக்குத் தீங்கென்றால் பொறுத்துக் கொள்வேன். தமிழுக்குத் தீங்கென்றால் தாங்க மாட்டேன். தவறுகளைச் சுட்டிக் காட்டுவது தவறன்று என வாழ்ந்தேன்.

என் எழுத்துக்கள் சிறந்தவை என்பதற்காக இவற்றை எழுதவில்லை. என்னைப் போல், இளைஞர்களே, ஆய்வாளர்களே நீங்களும் பயனை எதிர்பாராது, தமிழைக் கற்று அதற்கே ஆட்படுங்கள், உங்கள் வாழ்வு ஒளிமயமாகும் என எதிர்கால இளையோர்க்கு வழிகாட்டவே இவற்றை உங்கள் முன் வைக்க முயன்றேன். இதில் எப்போதும் எனக்குத்துணையாக இருக்கும் தகைசால் தேசியப் பேராசிரியர் இரா.மோகனும் அமெரிக்கன் கல்லூரி இணைப் பேராசிரியர் உல.பாலசுப்பிரமணியனும் மணியம்மை மழலையர் பள்ளித் தாளாளர், பி.வரதராசனும் ஊக்கம் தந்து, இதனைத் தொகுத்து வெளியிடத் துணை செய்தனர். அவர்களுக்கு என் அன்பும் நன்றியும் உரியன. அருள்கூர்ந்து நூலைப் படித்துப் பாருங்கள். வணக்கம்.

நன்றி

சதாசிவ நகர், தமிழண்ணல்
மதுரை-625020
12.8.2015

# உள்ளுறை


1. ஒப்பிலக்கியத் துறை
2. ஆராய்ச்சி நெறிமுறைக் கல்வி
3. முருகன் தமிழர்களின் முன்னோன்
4. சங்க இலக்கியக் காலம்
5. தொல்காப்பியர் - இலக்கணி மட்டுமல்லர் அவர் ஓர் ஒப்பற்ற இலக்கியக் கொள்கையாளர்
6. சங்க இலக்கியத்தில் மரபும் திறனும்
7. தொல்காப்பியக் கல்வி
8. தமிழ் இலக்கிய வரலாறு - புதிய பார்வை
9. நடைமுறைப் பயன்பாட்டு இலக்கணம்
10. சிவவழிபாட்டின் தொடக்கம் - தமிழ் நான்மறை விளக்கம்
11. ஆராய்ச்சிக் கட்டுரைகள்
12. நூல்கள்
13. கட்டுரைகள்
14. கவிதைகள்
15. வாழ்க்கைக் குறிப்பு
16. படிப்பில் ஏறிய படிகள்
17. பணி நிலைப் படிநிலைகள்
18. சிறப்புகள்

# 1. ஒப்பிலக்கியத் துறை

தமிழுக்கு ஒப்பிலக்கியத்துறை முற்றிலும் புதிது. பல்கலைக் கழகத்தில், அதை ஒரு முதுகலை வகுப்பிற்காக பாடம் என்று குறித்திருந்தனர். அவ்வளவே. வேறு எவ்விவரமும் இல்லை.

யான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்ததும் அப்பாடம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

கல்லூரி அளவு பல்கலைக்கழகம் கடினமாய் இராது என எண்ணியிருந்த எனக்கு, இது ஒரு சோதனை ஆயிற்று.

ஒப்பிலக்கியப் பாடத்திட்டம் உருவாக்குவது முதல், நூல்கள் பற்றிய விவரம், கற்பிக்கும் முறை எல்லாம் என்னால் விளக்கப்பட வேண்டியவை ஆயின.

கிரேக்க இலக்கியம் தமிழுடன் ஒப்பிடத்தக்கது என்று கண்டறியப்பட்டது.

சமஸ்கிருத இலக்கியக் கோட்பாடுகள் அனைத்தும் ஆங்கில நூல்கள் வழி கற்கப்பட்டன.

சி.எம்.பௌரா, ரெனேவில்லக் முதலான பலரது நூல்கள் வழி தமிழ் ஒப்பியலை விளக்க வேண்டியதாயிற்று.

வடமொழி இலக்கியக் கொள்கைகளை கே.சி.பாண்டே, எஸ்.கே. டே, வி.இராகவன் போல்வார் நூல்கள் வழி முழுமையாய் கற்க நேர்ந்தது.

இவ்வாறு, தமிழில் ஒப்பிலக்கியத் துறையைப் பாடம் நடத்தியும், நூல்கள் எழுதியும் வழி காட்டப்பட்டது.

தமிழிலக்கியக் கல்வியில் ஆழங்காற்பட இது தூண்டியது. நாட்டுப்புறவியல், உளவியல், தொல்பழங்கால மானுடவியல் போல்வன பற்றிய அறிமுகமும் கல்வியும் இயல்பாக அமைந்தன.

இந்தியாவிலேயே கொல்கத்தா அருகிலுள்ள ஒரு பல்கலைக்கழகம் தான் ஒப்பிலக்கியத்துறையைத் தொடங்கியது. அதற்கு அடுத்து மதுரை காமராசர் பல்கலைக்கழகம்தான் ஒப்பிலக்கியத் துறையைத் தொடங்கியது. தமிழகப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தமிழ் உயராய்வு மையங்கள் எல்லாம் இதைப் பின்பற்றின.

ஒப்பிலக்கியத்துறைக்கு எனப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு பல நிலைகளில் ஒப்பிலக்கியத்துறையை வளர்த்தது, தமிழுக்குத் தந்த காணிக்கையில் தலையாய தாகும்.

தமிழின் பன்முகச் சிறப்பை அறிய, ஒப்பிலக்கியத் துறையே உதவும் என்று நிறுவப்பட்டது.

## 2. ஆராய்ச்சி நெறிமுறைக் கல்வி

பேரறிஞர் மு.வ. துணைவேந்தரானதும், தமிழாசிரியர்களுக்கு முனைவர் பட்டத்திற்கான ஆய்வு செய்யும் விதிமுறைகளைச் சிறிது தளர்த்தி, பலரும் ஆய்வில் ஈடுபட வழிவகுத்தார். அவர்களுக்கு ஆராய்ச்சி நெறிமுறைகளைக் கற்பித்தால்தான், ஆய்வுகள் அறிவியல் முறைப்படி அமையும் என உணர்ந்தார். இதற்காகப் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிடம் உதவி பெற்று, பல்வேறு புத்தொளிப் பயிற்சி வகுப்புக்களை, கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் நடத்தச் செய்தார்.

பல்கலைக் கழகத்தில் இதனை, நடத்தும் பொறுப்பு என்னிடமும் பேராசிரியர். எம்.எஸ். இலக்குமணனிடமும் தரப்பட்டது. இதனால் ஆங்கிலத்திலுள்ள ஆய்வியல் நெறிமுறை பற்றிய நூல்களைக் கற்க நேர்ந்தது. பொருளியல் துறைப் பேராசிரியர் எம்.எஸ்.இலக்குமணன் இதற்கான ஆங்கில நூல்களைத் தேடிக் கொண்டு வந்து தந்தார்.

தமிழிலும் பாயிரவியல் போல்வன, ஆராய்ச்சி நெறிமுறைக் கல்வியாகத் தோன்றின.

ஒப்பிலக்கியத் துறை போல, அதனையும் இரவும் பகலும் கற்று ஆசிரியர்களுக்கு விளக்கவேண்டியதானது.

இது பற்றிய ஒரு நல்ல நூலை எழுதி முடித்தேன். 'ஆய்வியல் அறிமுகம்' என்ற அந்த நூல், ஆய்வாளர் அனைவரும் கற்கும் நூல் ஆயிற்று. பிற துறையினர்க்கும் அந்நூல் பயன்பட்டது.

இத்துறையில், இது முதல் நூல் மட்டுமன்றி, எளிதில் கற்க வழிகாட்டும் சிறந்த நூலும் ஆயிற்று.

பிற்பாடு, பலரும் பல்வேறு முறைகளில் இவ்ஆய்வு நெறி பற்றி எழுதினர்.

மேலும் இதுகாறும் ஆய்வு செய்த தலைப்புக்களும் பின்னரும் ஆய்வு செய்யக்கூடிய தலைப்புக்களும் ஓரளவு தொகுத்துத்தரப்பட்டன. பின்னர் அது 'தமிழியல் ஆய்வு' எனத் தனி நூலாகவும் தொகுத்து வெளியிடப்பட்டது. இது இத்துறையில் முதல் முயற்சி என்பது குறிப்பிடற்பாலது.

இவ்வாறு ஆராய்ச்சி நெறிமுறையையும் உருவாக்கித் தந்தது தமிழ்த்தாய்க்குப் படைத்த நல்ல காணிக்கை ஆனது.

இதில் என்னுடன் பணி செய்த ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் தந்த ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

## 3. முருகன் தமிழர்களின் முன்னோன்

தமிழ்த்தாயின் திருவடிக்கு நான் படைத்த காணிக்கைகளில், இது தனிச்சிறப்புடையது.

கன்னிமாரா நூலகத்தில் தமிழறிஞர்கள் கூடிய கருத்தரங்கில், கே.ஏ.நீலகண்ட சாத்திரியார் முருகன் தமிழ்க் கடவுள் அல்லன்; மத்திய ஆசியாவிலிருந்து வடநாடு வந்து, தென்னாட்டில் புகுந்து வழிபடப்பட்டவன் என்று சில வலுவில்லாச் சான்றுகள் தந்து படித்துள்ளார்.

இதைக் கேட்டுத் தமிழறிஞர்கள் துணுக்குற்றனர். பேராசிரியர். சி.இலக்குவனார் அக்கட்டுரையின் தட்டச்சுப்படி ஒன்றைக் கொண்டு வந்து என்னிடம் தந்து அதற்கு ஒரு மறுப்புரை எழுதும்படி கூறினார். அவரது குறள் நெறி இதழில் அது வெளியிடப்பட்டது.

தொல்பழங்காலத்தில், சேர, பாண்டியர்கள் கடல் வாணிகத்தில் ஈடுபட்டு விளங்கினர். கடலில், கடற்கொள்ளைக்காரர்கள், இவர்க்ளின் பொருள்களைக் கொள்ளை அடித்து, பெரும் தொல்லை கொடுத்தனர்.

சூரபன்மா முதலான அசுரர்கள் என்று இவர்கள் புராணங்களில் குறிக்கப்பட்டனர்.

இவர்களை அழித்து, தமிழர்களின் கடல் வாணிகம் செழிக்கச் செய்ததில், முருகன் என்ற தமிழ் வேந்தனுக்குப் பெரும் பங்கு உண்டு. பின்னர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்திலும் இவர்களுடன் போரிட்டு அழிக்கப்பட்டனர். இச்சூரர்கள் கடலினுள் இருந்த தீவுகளில் வாழ்ந்தனர். இவர்களுக்குக் காவல் மரம் முதலானவை உண்டு. சூரபன்மா

என்ற, இவர்களின் தலைவனுக்கு தமிழ் வேந்தர்களைப் போன்றே, படை, ஆயுதம் காவல் மரம் எல்லாம் உண்டு. இவனது காவல் மரம் மாமரமாகும்.

முருகன் இவனுடன் போரிட்டு அழித்தான் இவனது காவல் மரமாம் மாமரத்தை வெட்டி வீழ்த்தினான்.

முருகன் ஆறு படைவீடுகளைக் கடற்கரைகள் முழுவதும் வைத்து எத்திசையிலும் சூரர்கள் தப்ப முடியாதபடி போரிட்டு அழித்தான்.

தமிழர்களின் கடல்வழி வாணிகம் செழிக்கச் செய்தான்.

வேற்படை என்பது நீண்ட தண்டாயுதம் இதன் தண்டு – நீளமாக இருக்கும். இது யானைப் போரிலும் கடற்போரிலும் மிகவும் பயன்பட்டது.

அரிவாள் முதலான கருவிகளே இருந்த காலத்தில், ஆங்கிலேயன் வெடிகுண்டு துப்பாக்கி முதலியவற்றைப் பயன்படுத்தி வீரர்களை வெல்ல முயன்றது போல, அன்று வேல் பயன்பட்டது. முருகனுக்கு அடுத்தபடியாக வேற்படை மிகவும் போற்றப்படுகிறது.

முருகன் குறிஞ்சி நிலத்தவன், அவன் தினைப்புனம் காத்த வள்ளியைக் காதலித்து மணந்த கதை வரலாறேயாகும்.

யானைக்குப் பயந்த வள்ளி, கந்தனை அணைத்துக் கொண்டாள்.

இவை போல்வன பலவும் புராண வடிவக் கற்பனைகள் ஆயின. முதன்முறையாக இவை அனைத்தையும் ஆராய்ந்து எழுதி, முருகனே தமிழரின் அகம், புறம் ஆகிய வாழ்வில் மேல் வரிச் சட்டமாக விளங்கியது நன்கு விளக்கப்பட்டது.

முருகன் தமிழர்களின் வேந்தனாய், தலைவனாய் விளங்கி, கடவுளான வரலாறு ஐயத்திற்கிடமின்றித் தெளிவுபடுத்தப்பட்டுளது.

# 4. சங்க இலக்கியக் காலம்

சங்க காலம், மறுத்தற்கியலாச் சான்றுடன் நிறுவப்பட்டுள்ளது. அரிமா நோக்கு இதழ், 'தமிழ் இலக்கியத் தொன்மை' என்று தனி நூலாக இதனை வெளியிட்டுளது.

குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு போன்ற நூல்களில், அதற்கான அகச் சான்றுகள் உள.

வடநாட்டில் பல சிறு சிறு அரசுகள் பிரிந்து கிடந்த போது, மௌரிய அரசே, பேரரசாக உருவெடுத்தது. ஆயினும் தொடக்கத்திலேயே, அவர்களை வென்று 'நந்தர்கள்' என்ற குடிவழியினர் பேரரசர்களாக மூன்று நூற்றாண்டுகள் ஆண்டனர். அவர்களில் மிகச் சிறந்து விளங்கியவன் 'மகாபதும நந்தன்'! இவர்கள் சூத்திர அரசர்கள் என்று வரலாற்றறிஞர் ஒருவர் எழுதியுள்ளார்.

இவர்கள் காலத்தில் பாடலிபுத்திர நகரம் உலகப்புகழ் பெற்று விளங்கியது.

இது கங்கைக்கரையில் இருந்தது எனப்பலரும் எழுதிப் போயினர். குறுந்தொகைப் பாடல் ஒன்றில், அந்நகரம் சோனை ஆற்றங்கரையில் இருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றறிஞர் வி.ஏ.ஸ்மித், பாடலிபுத்திர நகரம் கங்கையிற் கலக்கும் சோனையாற்றின் கரையில் இருந்தது என எழுதியுள்ளார். அதற்கு அவர் தொல்பொருள் ஆய்வுச் சான்று தந்துள்ளார். இது அவ்வாறே தமிழிற் கூறப்பட்டிருப்பது வியப்பூட்டும் செய்தியாகும்.

நந்தர்களைப் பற்றிய குறிப்பு தெளிவாக உளது 'பின்னர் மீண்டும் ஆட்சிக்கு வந்த மௌரியப் பேரரசு தெற்கே வந்து, தமிழக எல்லையோடு நின்றது முதலான பல செய்திகள் தமிழில் காணப்படுகின்றன.

இவை அனைத்தின் அடிப்படையில் தமிழ் இலக்கியம் கி.மு.நான்கு, மூன்றாம் நூற்றாண்டுகளில் சிறந்து விளங்கினது, தெளிவுறுத்தப் பட்டுள்ளது.

வேறு எவரும் இது பற்றி அறிந்து எழுதாத நிலையில், இது தமிழுக்குப் புதுவரவாகும்.

1. நந்தர்கள் 2. மோரியர் (மௌரியப் பேரரசு) 3. பாடலிபுத்திர நகரமும் சோனை ஆறும். இவை பற்றி சங்கப் பாடல்களில் வரும் செய்தி, இந்திய வரலாற்றுடன் ஒத்துவருகிறது.

இதனை ஏற்க இயலாத ச.வையாபுரிப்பிள்ளை மோரியர் என்பதற்கு, அவராக வேறு பொருள் தந்து தடுமாறுகிறார். தமிழின் தொன்மையை ஏற்க மறுப்பார்க்கு இவை சரியான எதிர் மறுப்பாக அமைகின்றன.

## 5. தொல்காப்பியர் இலக்கணம் எழுதியவர் மட்டுமல்லர் ; அவர் ஓர் இலக்கியக் கொள்கையாளர்

எல்லோரும் தொல்காப்பியத்தை ஓர் இலக்கண நூல் என்றே பார்த்ததால், அவர் ஓர் இலக்கியக் கொள்கையாளர் என எண்ணும் சிந்தனை இல்லாது போனது.

பாணினியோடு பலவாறு தொல்காப்பியத்தை ஒப்பிட முயன்ற அவர்கள் அவரது இலக்கியக் கொள்கை பற்றிய சிந்தனை, பாணினீயத்திலும் காணாதது என்பதை எடுத்துக் காட்டிலர்.

1980களில் பல்கலைக்கழக நல்கைக்குழு (U.G.C.)எனக்கு, தேசியப் பேராசிரியர் (National Lecturer) என ஒரு சிறப்பைத் தந்தது. அதன்படி தில்லி முதல் திருவனந்தபுரம் வரை, தமிழ்த்துறை இருந்த பல்கலைக் கழகங்களில், சென்று விரிவுரை ஆற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

அதில்தான் நான் தொல்காப்பியர் ஓர் இலக்கியக் கொள்கையாளர் எனப் புதுவதாக எடுத்துப் பேசினேன்.

பரதமுனிவரையும் அரிஸ்டாடிலையும் அடிக்கடி எடுத்தாண்டவர்கள் தொல்காப்பியர் அவ்இருவர்க்கும் நிகரானவர்; தெளிவுபட விளக்கியதில் மேலானவர் என்பதைக் கண்டுகொண்டு தனியே எதனையும் விளக்க வில்லை.

நான் முதலில் உள்ளுறை, இறைச்சி, மெய்ப்பாடு, நோக்கு எனத் தனித்தனிச் சிறுநூல்கள் எழுதி விளக்கினேன். பிறகு அக்கருத்தை மையமாகக் கொண்டு தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் அனைத்தையும் விளக்கி, ஒரு நூலை எழுதினேன்.

இப்புதிய பார்வை பலரையும் ஈர்த்தது. ஆய்வாளர் பலர் திருவாசகத்தில் நோக்கு, திருக்குறளில் நோக்கு எனத் தலைப்பு எடுத்து ஆராயத் தொடங்கினர்.

'தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்' என்ற நூலையும், இலக்கிய வகைகள் பற்றிய நூலையும் 'சங்க இலக்கிய ஒப்பீடு' என்ற நூலையும் இதனடிப்படையில் எழுதினேன்.

எனது 'சங்க இலக்கிய ஒப்பீடு' என்ற நூலை, தமிழ் மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் தமிழண்ணலின் ஒரு நூல் (ஒப்பற்ற நூல்) எனப் பாராட்டி எழுதினார்.

உள்ளுறை, இறைச்சி இரண்டையும் தனித்தனி எனத் தெளிய முடியாத அக்காலத்தில் குறிப்புப் பொருள் என்று பொதுவாக எழுதினர்.

உள்ளுறை இறைச்சி பற்றிய சிற்றேடுகளில் அவை இரண்டும் தனித்த கருத்தினை உடையன எனத் தெளிவுறுத்தப்பட்டது.

உருக்காட்சி என்ற பார்வையில் மெய்ப்பாடு புதிய விளக்கம் பெற்றது.

நோக்கு என்பது உலகளாவிய இலக்கியக் கோட்பாடு என விளக்கப்பட்டது.

இலக்கியத்தில் புராணம் என்பதை, ஒப்பிலக்கியப் பார்வையில், தொன்மம் எனப் பெயரிட்டு, புதுவ்ரவாய் தமிழின் சிறப்பறிய விளக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்க் கல்வியை, இலக்கிய ஆய்வை விரிவுபடுத்தவும், ஆழப்படுத்தவும் இந்நூல்கள் வழிகாட்டின.

# 6. சங்க இலக்கியத்தில் மரபும் திறனும்

எனது முனைவர் பட்ட ஆய்வேடு 'சங்கப் பாடல்களில் இலக்கிய மரபுகள்' (Literary conventions in Cankam Poetry) என்பது.

பொதுவாக பழங்கால இலக்கியங்கள் மரபைப் போற்றுவன. அதனால் அவை ஒரே மாதிரி காணப்படும். அவற்றில் கவிஞனின் தனித்திறன் வெளிப்பட வாய்ப்பில்லை எனப் பலரும் கூறுவர்.

நன்கு ஆராய்ந்து சங்கப்பாடல்களில் மரபு மாறாத தனித்திறன் விளங்கும் இடங்களை விளக்கி, சங்கப் புலவர்களின் ஒப்பற்ற தனித்திறமைகள் வெளிப்படுத்தப்பட்டன. பிற்பாடு, சங்க இலக்கியத்தில் மரபும் திறனும் என இது வெளியிடப்பட்டது. ஆங்கிலத்தில் (Tradition and talent in Cankam Poetry) என யான் எழுதியதை, பெரும் பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன் 'சங்க மரபு' எனத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார்.

எனது ஆய்வேட்டில் திணை, கூற்று அடிப்படையில் சங்கப் பாடல்கள் முழுமைக்கும் ஒரு புள்ளி விவரப்பட்டியல், பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை கைக்கிளை, பெருந்திணை மற்றும் புறத்திணை சார்ந்த ஏழு திணைகள் என அனைத்தையும் தனித்தனியே ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. இது இவை ஆய்வாளர்கள் மேன்மெலும் ஆராய, ஓர் அடிப்படைக்கல்வியாக அமைவனவாகும்.

சங்கப் புலவர்களின் தனித்திறன்கள் மிக நுட்பமானவை, காலமெல்லாம் ஆராய, அத்துணைக் கருவூலங்களை உடையவை.

என்னுடைய கட்டுரைகள் யாதாயினும் அதில் ஒரு கருத்து இழையோடும்; வெற்றெனத் தொடுத்தல் இராது.

'சங்க இலக்கியத்தில் மரபும் திறனும்' என்ற எனது ஆங்கில நூலையும் பேராசிரியர் கு.வெ.பா.தமிழில் தந்த சங்க மரபு என்ற நூலையும் படித்தால் ஆய்வாளர்க்கு சங்க இலக்கியக் கல்வி முழுமை பெற அமையும் எனலாம்.

இந்நூலில் வரும் ஒவ்வொரு தலைப்பும் தனி நூலாகும் தகுதி உடையது.

# 7.தொல்காப்பியக் கல்வி

தொல்காப்பியத்தை, நாளும் மறவாமல் போற்றி எழுதியவர்களில் கணக்காயர் ச.சோ.பாரதியார், க.வெள்ளை வாரணர், சி.இலக்குவனார், வ.சுப.மாணிக்கம் போல்வார் குறிக்கத்தக்கவர்கள். என் முயற்சியில் தொல்காப்பிய இலக்கணக் கல்வி ஆய்வாளர், மாணவர், ஆர்வலர் என அனைவரிடமும் பரவியது.

1. தொல்காப்பிய மூலம் - தெளிவுரை எனும் எனது கையடக்கப்பதிப்பு குறிக்கத்தக்கது.

தொல்காப்பிய உரையில் பல இடங்களில் புதிய காட்டுகள் தர முயன்றுள்ளமை காணலாம்.

2. தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் மூன்றும் எளிமையுடன் விளங்குமாறு பதிப்பிக்கப்பட்டன. பொருளதிகாரம் மட்டும் 4 பகுதிகளாகப் பிரித்து விளக்கப்பட்டது. இங்ஙனம் தொல்காப்பியத்தை ஆறு பகுதிகளாக வகைப்ப்டுத்தி, ஒவ்வொன்றையும் தெளிவுரையுடன் தந்து மாணவர் பதிப்புகள் வெளியிடப்பட்டன. அதில் ஒவ்வொர் இயலிலும் முதற்கண் உள்ளடக்கக் கருத்து நிரல் உரைநடையில் எழுதப்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் தனியே தொகுத்து. தனி நூலாக்கினால், அது உரைநடைத் தொல்காப்பியம் ஆகும். மாணவர்களும் ஆர்வலர்களும் எளிதில் விளங்கிப் படிக்க இது உதவும். இவை ஆசிரியர்களாலும், ஆய்வாளர்களாலும் - மாணவர்களாலும் விரும்பிக் கற்கப்படுகின்றன.

3. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் பற்றிய நூல்கள், தொல்காப்பியச் சிறப்பை அறிய உதவுவன.

திருக்குறள் சிறந்தது, தொல்காப்பியம் சிறந்தது, தமிழ் நூல்கள் ஒப்பற்றவை என்று பேசுவது எழுதுவதை விட, அவற்றிலுள்ள சிறப்புக்கள் சிலவற்றையேனும் விளக்கி எழுதுவதே தமிழின் மேன்மையை அறிய உதவும்.

தொல்காப்பியக் கட்டமைப்பை முழுமை பெறக் கற்றாலே, தமிழ் இலக்கணத் தனிச்சிறப்பு விளங்கிவிடும். சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள 'தொல்காப்பியர்' என்ற எனது நூல் இவ்வாறு சுருக்கித் தரப்பட்டதாகும்.

இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முக்கர்ஜி 'தொல்காப்பியர் விருது' தரும் வாய்ப்பு, தானே எனக்கு வந்து வாய்த்ததற்கு, எனது இப்பணிகளே காரணமாகும்.

# 8. தமிழ் இலக்கிய வரலாறு

தமிழ்ப்புலவர், தமிழாசிரியர், தமிழ் ஆர்வலர்களில் திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் தொகை மிகக் கூடுதல். அது போல தமிழ் இலக்கிய வரலாற்றைப் பெரும்பாலோர், ஒரே கருத்தை வைத்துத் தம் நடையில் எழுதுகின்றனர்.

ஒப்பிலக்கியப் பார்வையில் இவை ஏமாற்றமே தருகின்றன. ஆசிரியர்கள் காலம், பிறப்பு இறப்பு என எழுதுவனவும் அவர்கள் எழுதிய நூற்பட்டியலும் முழுமை பெற்ற இலக்கிய வரலாறு ஆகா.

இலக்கிய வரலாறு என்பது, இலக்கியத்தின் வரலாறாக அமைய வேண்டும். காலந்தோறும் ஏற்பட்ட, பாடு பொருள் வளர்ச்சி, யாப்பு வடிவ வளர்ச்சி, இலக்கிய உத்திகளின் வளர்ச்சி என இவற்றை, உள் நுழைந்து கற்று எழுத வேண்டும். முன்னைய முறையில், நூற்பெயர்கள், ஆசிரியர் பெயர்கள் தெரிந்தால் போதும். அறிஞர் மு.அருணாசலம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களே, முழுமை பெற அவற்றைப் பார்த்து படித்து, உள் நுழைந்து கற்று எழுதியவை.

எனது நூல் மாணவர்களுக்கென எழுதப்பட்டது. அதனால் சுருக்கமாக, அதே சமயம் புதிய பார்வையில் எழுதப்பட்டுள்ளது.

எடுத்ததும் முதல் நூறு பக்கங்கள் இலக்கியக் காலப் பகுப்புக்கள், அரசியல் பின்னணி வரலாறு அதன் காரணமாக இலக்கியத்தில், மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் என இவை போல்வன விளக்கப்பட்டுள்ளன.

பிறமொழித் தாக்கம், தமிழ்ச் சொற்களில் ஏற்பட்ட வளர்ச்சி, பண்பாடு நாகரிகம் போல்வனவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியும் தளர்ச்சியும் என இவை போல்வன தரப்பட்டுள்ளன.

இதனால் இந்நூல் பல பதிப்புக்கள் வெளிவந்து, மாணவர்கள், ஆய்வாளர்கள், வேலை வாய்ப்புக் கல்வி கற்போர் என அனைவராலும் விரும்பிக் கற்கப்படுகின்றன. நம் நூல்களை அறிஞர்களுக்காக மட்டுமல்லாமல், மக்களுக்காகவும் எழுத வேண்டும். அதிலிருந்து புதிய சிந்தனை தோன்ற வேண்டும்.

## 9. நடைமுறைப் பயன்பாட்டு இலக்கணம்

ஆங்கிலத்தில் இலக்கண நூல்கள் ஒவ்வொன்றும் புதிய புதிய அணுகுமுறைகளால் இலக்கணத்தை எளிமைப்படுத்தித் தரமுயலும். ரென் அண்டு மார்ட்டின் பள்ளி மாணவர்க்குப் பயன்படுமாறு எழுதியுள்ள இலக்கண நூல் தனித்தன்மை உடையது. அதே இலக்கணத்தை வேறு ஒரு புதிய அணுகு முறையுடன் தருவார் நெல்சன். அவர்கள் புதிய புதிய அணுகு முறைகளில் எழுதிப் படிப்பவர் உள்ளத்தில் புதிய வைப்பார்கள். உதாரணங்களும் புதிது புதிதாக இருக்கும். கடினமான மொழியை எளிமையாக்கித் தருவார்கள்.

தமிழில் புதிதாக இலக்கணத்தை அணுகும் முயற்சி சிறிதளவும் இல்லை. ஒன்றைப் பார்த்து ஒன்றை எழுதுவதுதான் வழக்கம். புதிய உதாரணங்களே தரமாட்டார்கள். வெற்றிலை நட்டான், விளக்கு ஒடிந்தது என இதுபோல பழைய உதாரணங்களே திரும்பத் திரும்ப வரும்.

மொழியியல் அறிஞர்கள் கடுமையாக ஆராய்ந்து வானத்தில் பறப்பார்கள். கீழே இறங்கி வந்து இலக்கணத்தை எளிமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட மாட்டார்கள்.

'இனிய தமிழ் மொழியின் இயல்புகள்' என மூன்று சிற்றேடுகளை எழுதினேன். புதிதாக எழுத வழிகாட்டுபவை அவை. தினமணியில் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என சுமார் 5 1/2 ஆண்டுகள் வாரந்தோறும் எழுதினேன். பேரறிஞர் ஐராவதம் மகாதேவன் எனக்கு முழு உரிமையும் தந்து எழுதவைத்தார்.

மதுரை வானொலியில் 'பழகு தமிழ் அறிவோம்' என 49 வாரம் ஒலிபரப்பானது. வானொலி நிகழ்ச்சிப் பொறுப்பாளர் சுந்தர ஆவுடையப்பன் வினாத்தொடுக்க, நான் விளக்கம் கூறுவேன். இது சிங்கப்பூர் வானொலியிலும் ஒலிபரப்பானது. இவை இன்னும் அச்சேறவில்லை.

'சொல் புதிது பொருள் புதிது', 'பிழை திருத்தும் மனப்பழக்கம்', 'அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும்'. 'தமிழ் உயிருள்ள மொழி', 'பொதுத்தமிழ்', 'பேசுவது போல் எழுதலாமா பேச்சுத்தமிழை இகழலாமா' எனப் பல்வேறு சிற்றேடுகள் எழுதப்பட்டன. என் எழுத்துச் சீர்வரிசையில் இதுவும் குறிப்பிடத்தக்கதாகும்.

தேவாரத்தில் வேதங்கள் இறைவனைக் காணாது தேடுவன, இறைவனை எட்ட முடியாதன, அடிமுடி காணாதன எனவரின் அது வடமொழி வேதங்களைக் குறிக்கும்.

மறை, அறம் எனக் கூறப்படும் தமிழ் வேதங்கள் முன்னதிலிருந்து முழுமையாய் வேறுபட்டன. இவை தூய நான்மறை எனப்படும். 'சொற்றமிழ் பாடுகென்றான் தூமறை பாடும் வாயான்' என்பது தமிழ்மறை. மறை நான்கும் கல்லால் நிழற்கீழ் பன்னிய எங்கள் பிரான் (திருப்பழ மண்ணிப் படிக்கரை) 'அன்று ஆலின் நிழற்கீழ் அறம் நால்வர்க்கு அருள்புரிந்து' (திருக்கடவூர்) இவை நுட்பமாய் ஆராய்ந்து, வேறுபடுத்திப் பார்க்கத்தக்கன.

தமிழ்ப் பேரறிஞர் கா.சு.பிள்ளை திரு நான்மறை விளக்கம் என ஒரு நூல் எழுதியுள்ளார். சிவமதம் பற்றிய வரலாற்று வழி ஆய்வு இது.

## 11. குறிப்பிடத்தக்க ஆய்வுகள்

1. தைத்திங்களே தமிழாண்டின் தொடக்கம் என்பது பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை.
2. திருக்கார்த்திகையே தொன்மைமிக்க தமிழர் விழாவாகும். இடைக்காலத்தில் அதிலிருந்து பிரிந்ததே தீபாவலி என்ற விளக்கம் புதியது.
3. தமிழ் அரசு – இராஜாவான கதை ஒரு நல்ல ஆய்வுரை இது.
4. கபிலர் பாடல்களின் தனித்தன்மை-கலித்தொகை, ஐங்குறுநூறு குறிஞ்சிப்பாடல்கள் அவர் பாடியவையே என்பது நிறுவப்பட்டுள்ளது.
5. இராவாண்டை பற்றிய கட்டுரை பிறைதொழும் பெண்கள் எனச் சிறு நூலானது.
6. சிலம்பில் வரும் காப்பிய உவமை – வஞ்சிக் காண்டம் பிற்சேர்க்கை அல்ல; அது காப்பியத்தின் பிரிக்க முடியாத பகுதி என்பது நன்கு விளக்கப்பட்டுள்ளது.
7. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – அரசியல், சமுதாயப் பின்னணியும் இலக்கிய வளர்ச்சியும் ஒன்றினொன்றும் இணைந்தவை என்பதைக் காட்டும், முதலிலுள்ள பகுதி புதிய அணுகுமுறையாகும்.
8. திருவாசகம் பற்றிய நூல் ஒரு புதிய பார்வையைத் தருவது.
9. ‘தவம்’ பற்றிய புதிய சிந்தனை விளக்கம். திருவள்ளுவரின் தவம், துறவு பற்றிய சிந்தனை புதுமையானது.
10. ஒன்பது – பற்றிய விளக்கம். ஒன்பது – பத்து, தொண்ணூறு நூறு தொள்ளாயிரம் ஆயிரம். இவை பற்றிய விளக்கம்.

11. செவ்வியல் பற்றி முன்பே ஒப்பியல் நெறியில் விளக்கியமை. 'சங்கச் செவ்வியல்', செ.சாரதாம்பாளுக்குத் தரப்பட்ட ஆய்வுத்தலைப்பு.

12. சேக்கிழார் 'மனுநீதிச் சோழன்' கதையை ஏன் பாடினார் என்பது பற்றிய விளக்கம்.

13. திருத்தக்கதேவரின் 'படிமக் காட்சிப் படைப்பு' பற்றிய சிந்தனை.

14. திருவள்ளுவர் வடமொழி சார்ந்த பண்பாட்டு நுழைவை மறுத்து, தமிழ்ப் பண்பாட்டை நிலை நிறுத்தவே நூல் எழுதினார் என்பது தெளிவுறுத்தப்பட்டுளது. திருக்குறளில் உள்ள தன் முன்னேற்றச் சிந்தனைகள் விளக்கப்பட்டுள்ளன.

### தமிழின் சிறப்பை நிலைநிறுத்தும் நூல்

15. இரா.நாகசாமி தமிழ் மொழியை இழிவுபடுத்தி ஆங்கிலத்தில் நூல் எழுதி, பிற மொழியாளரிடம் பரவும்படி செய்ய முற்பட்டார். தமிழார்வலர் எவரும் இதைக் கண்டு கொள்ளவில்லை. சமஸ்கிருதத்தையும் பிராகிருதத்தையும் பின்பற்றி, அவற்றிலிருந்து கடன் வாங்கி வளர்ந்து தமிழ் செவ்வியல் மொழி ஆனதாம். தொல்காப்பியம் இலக்கண நூலன்று, அது நாட்டியப் பாடல்களின் தொகுப்பு என்றும் சிலப்பதிகாரம் முற்றிலும் பொய்யான கற்பனைக்கதை என்றும் இவ்வாறு மூளை பிரண்டவன் போல் ஏதேதோ எழுதியுள்ளார். அவருடைய கருத்துக்கள் அனைத்தும் பொய்யும் புரட்டும் என்று தெளிவுபடவும் மறுக்கவியலாச் சான்றுகளுடனும் இந்நூல் எழுதப்பட்டுளது. அந்நூலை முழுவதும் படித்து, தமிழில் தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமியின் பழுதடைந்த கண்ணாடியும் பார்வைக் கோளாறுகளும் என ஒரு நூலை எழுதி, அதனைத் துணைவேந்தர் மு.பொன்னவைக்கோ, தமிழ்ப் பேராயத்தின் வழி வெளியிட்டமை. பிறகு அதனை ஆங்கிலத்திலும் வெளியிடச் செய்தனர். பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன் அதை ஆங்கில மொழியாக்கம் செய்தனர்.

# 12. நூல்கள்

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | குழந்தைகள் இலக்கியம் (மு.வ.அணிந்துரை) | சிறுவர் பாடல்கள் | உண்மைப்பிரசுரம் தேவகோட்டை | 1949 |
| 2. | தாலாட்டு | நாட்டுப்பாடல் தொகுப்பு | செல்வி பதிப்பகம் காரைக்குடி | 1956 |
| 3. | பரிசில் வாழ்க்கை | சங்க இலக்கியம் | பாரி நிலையம் மீனாட்சி | 1956 |
| 4. | குறிஞ்சிப் பாட்டுத் திறனாய்வு விளக்கம் | சங்க இலக்கியம் | பாரி நிலையம் மீனாட்சி | 1956 |
| 5. | மொழி வழிச் சிந்தனைகள் | தமிழின் சிறப்பு | பாரி நிலையம் மீனாட்சி | 1956 |
| 6. | காதல் வாழ்வு | நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு | செல்வி பதிப்பகம் காரைக்குடி | 1957 |
| 7. | இலக்கியத்தில் இன்பச் சுவை | இலக்கியக் கொள்கை | செல்வி பதிப்பகம் காரைக்குடி | 1958 |
| 8. | பிறை தொழும் பெண்கள் (காரைக்குடியில் தொகுத்தது) | நாட்டுப்புறப் பாடல்கள் | மீனாட்சி புத்தக நிலையம் | 1975 |
| 9. | தொல்காப்பியர் | அறிமுகம் | சாகித்திய அகாதெமி | 1998 |
| 10. | ஔவையார் | அறிமுகம் | ” | |
| 11. | தொல்காப்பியம் | கையடக்கப்பதிப்பு | மீனாட்சி புத்தக நிலையம்,மதுரை | 2008 2009 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 12. | தொல்காப்பியரின் இலக்கியக்கொள்கைகள் | ஆய்வு | ” | 1985 |
| | கொள்கைகள் | | | 1986 |
| | நோக்கு மெய்ப்பாடு | ஆய்வு | ” | 1986 |
| | உள்ளுறை | ஆய்வு | மீனாட்சி புத்தக நிலையம்,மதுரை. | 1986 |
| | இறைச்சி | ” | ” | 1986 |
| 13. | நான்கும் ஒரே நூலாக | ஆய்வு | ” | 2004 |
| 14. | தொல்.எழுத்ததிகாரம் | மாணவர் பதிப்பு | மணிவாசகர், மீனாட்சி புத்தக நிலையம் | 2003 2010 |
| 15. | தொல்.சொல்லதிகாரம் | மாணவர் பதிப்பு | ” | 1994-2010 |
| 16. | தொல்.பொருளதிகாரம்-I | மாணவர் பதிப்பு | ” | 2003-2010 |
| 17. | தொல்.பொருளதிகாரம்-II | ” | ” | 2003-2010 |
| 18. | தொல்.பொருளதிகாரம்-III | ” | ” | 2003-2010 |
| 19. | தொல் காப்பிய அறிமுகம் சிற்றேடுகள் : | அறிமுக நூல்கள் | மீனாட்சி புத்தக நிலையம் | 2008 |
| | தொல்காப்பியத் தோற்றம் | | | |
| | தொல்காப்பியச் சுடர்மணிகள் | ” | ” | |
| | தொல்காப்பியத் தமிழ்நெறிகள் | ” | ” | |
| | தொல்காப்பியச் சொற்சுவைகள் | ” | ” | |
| 20. | புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு | பின்புலமும் இலக்கிய வகையும் | மீனாட்சி புத்தக நிலையம் | 1980 2015 33ம் பதிப்பு |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 21. | உலகத்தமிழ் இலக்கிய வரலாறு | கி.பி.500 வரை | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 2004 |
| 22. | ஆய்வியல் அறிமுகம் | ஆராய்ச்சி நெறிமுறைகள் | மீனாட்சி புத்தக நிலையம் | 1977 2015 16-ம் பதிப்பு |
| 23. | ஆய்வியல் வழிகாட்டி | (இரா.மோகனுடன்) | " | 1979 |
| 24. | ஒப்பிலக்கிய அறிமுகம் | ஒப்பியல் | மீனாட்சி புத்தக நிலையம் | 1973 2014 15-ம் பதிப்பு |
| 25. | சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள் | ஒப்பியல் | " | 1975 1979, 1985 2003, 2008 |
| 26. | இலக்கிய வகைகள் | ஒப்பியல் | " | 1978, 1979, 2005, 2009 |
| 27. | தமிழியல் ஆய்வு | தலைப்பு வங்கி (துறை முயற்சி) | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1975 1988 |
| 28. | Tradition and Talent in Cankam Poetry | Ph.D.,ஆய்வேடு | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 2010 |
| 29. | சங்க மரபு - தமிழாக்கம் | கு.வெ.பாலசுப்பிரமணியன் | மீனாட்சி புத்தக நிலையம் | 2009 |
| 30. | திருக்குறள் நுண்பொருளுரை | விளக்கம் | மீனாட்சி புத்தக நிலையம் | 1999 2009 |
| 31. | திருக்குறள் மூலமும் தெளிவுரையும் | கையடக்கப் பதிப்பு | திருக்குறள் ஊழியம் மீனாட்சி பு.நிலை. | 2007 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 32. | திருவள்ளுவர் அருளிய திருக்குறள் | சுருக்கவுரை | ” | 2000 |
| 33. | இளைஞர் வாழ்வில் திருக்குறள் | கட்டுரைகள் | ” | 1997 |
| 34. | **வாழ்க்கை வெற்றிக்கு வள்ளுவம்** இன்ப வாழ்வுக்கு இனிய வழி தன்னம்பிக்கை தன் முயற்சித்தவம் துன்பத்தைத் துன்புறுத்துக ஆளுமை மேம்பாடு என ஐந்து சிற்றேடுகள் | குறள்வழி விளக்கம் | மணிவாசகர் மீனாட்சி புத்தக நிலையம் | 1995 |
| 35. | திருக்குறள் உணர்த்தும் தமிழர் சமயம் | குறள் நெறி | மீனாட்சி புத்தக நிலையம் | 1999 |
| 36. | வாழ்க்கைக்கு ஒளி தரும் வள்ளுவம் | கட்டுரை | மீனாட்சி புத்தக நிலையம் | 2000 |
| 37. | திருவள்ளுவரின் மனித நேயம் | கட்டுரை | மீனாட்சி புத்தக நிலையம் | 2000 |
| 38. | திருக்குறள் சிற்றேடுகள்: இளைஞனே கடமையை நினைவு கொள்! | திருக்குறள் பொச்சாவாமை | திருக்குறள் ஊழியம், மதுரை | 2000 |
| 39. | நன்னூல்-எழுத்ததிகாரம் | உரை விளக்கம் | மீனாட்சி புத்தக நிலையம் | 2003 |
| 40. | நன்னூல்-சொல்லதிகாரம் | உரை விளக்கம் | ” | 2004 |
| 41. | யாப்பருங்கலக்காரிகை | உரை விளக்கம் | ” | 2004 |
| 42. | நம்பியகப் பொருள் | உரை விளக்கம் | ” | 2005 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 43. | தண்டியலங்காரம் | உரை விளக்கம் | ” | 2005 |
| 44. | இனிக்கும் இலக்கியம் | ஆனந்த விகடனில் வந்த கட்டுரைகள் | மணிவாசகர், சென்னை | 2000 2006 |
| 45. | மாணிக்கத்தமிழ் | கட்டுரைகள் | ” | 1997 |
| 46. | கம்ப நாடகம் | சென்னை, கம்பன் கழகம் - பொழிவு | வானதி பதிப்பகம் மீ.பு.நி. | 1995 |
| 47. | புதிய நோக்கில் திருவாசகம் | அறக்கட்டளைப் பொழிவு | மணிவாசகர் | 1987 2004 |
| 48. | உரை விளக்கு | திறனாய்வு | மீனாட்சி புத்தக நிலையம் | 1985 |
| 49. | சிலப்பதிகாரம் இசை நாடகம் | பாவலர் மணி ஆ.பழநியுடன் | ” | 2005 |
| 50. | உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் | தினமணிக் கட்டுரைகள் | மீனாட்சி புத்தக நிலையம் | 1989 |
| 51. | இனிய தமிழ் மொழியின் இயல்புகள் I II III | புதிய முறை இலக்கணம் | மீனாட்சி புத்தக நிலையம் | 1984 முதல் பல பதிப்புகள் |
| 52. | சொல் புதிது சுவை புதிது | சொற்பொருள் விளக்கமும் பிழை நீக்கமும் | மீனாட்சி புத்தக நிலையம் | 2002 |
| 53. | பிழை திருத்தும் மனப்பழக்கம் | ” | மீனாட்சி புத்தக நிலையம் | 2002 |
| 54. | தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும் | ” | மீனாட்சி புத்தக நிலையம் | 2002 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 55. | உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் (சுருக்கம்) | | தமிழ்நாடு அறக்கட்டளை (USA) | 2010 மே |
| 56. | பேசுவது போல் எழுதலாமா? பேச்சுத் தமிழை இகழலாமா? | மொழிக்கல்வி | மீனாட்சி புத்தக நிலையம் | 2005 |
| 57. | தமிழ்த்தவம் | தமிழின் எதிர்காலம் | ” | 2005 |
| 58. | தமிழ் யாருக்குச் சொந்தம் | சிற்றேடு | மணிவாசகர் சென்னை | 1999 |
| 59. | மழலையர் தமிழ்க் கல்வியும் தமிழ்வழி உயர்கல்வியும் | தினமணிக் கட்டுரைத் தொகுப்பு | மீனாட்சி புத்தக நிலையம் | 1998 |
| 60. | தமிழனின் தாழ்வு மனப்பான்மை | ” | ” | 1998 |
| 61. | பொதுநலத்தில் குப்பை கொட்டும் இந்தியர்கள் | ” | ” | 1998 |
| 62. | தமிழ்வழிக்கல்வி வழக்கு (சிற்றேடு) | தமிழியக்கம் | தன்முயற்சித் தமிழியக்கம், மதுரை | 2001 |
| 63. | தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா? | தமிழில் வழிபாடு | தமிழ்த்தவ வெளியீடு | 2002 |
| 64. | வாழ்வரசி | வட்டார வழக்குப் புதினம் | சோலை நூலகம் | 1979 |
| 65. | நச்சுவளையம் | உளவியல் புதினம் | சோலை நூலகம் (தமிழக அரசின் பரிசு பெற்றது) | 1979 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 66 | குறுந்தொகை அரும்புகள் | சங்க இலக்கியப் பயிற்சிக்களம் | மீனாட்சி புத்தக நிலையம் | 2009 |
| 67 | நற்றிணை மலர்கள் | " | " | 2009 |
| 68 | புறநானூற்றுக் குறும்படங்கள் | " | " | 2009 |
| 69 | அகநானூற்றுக் காட்சிகள் | " | " | 2010 |
| 70 | குறுந்தொகைச் சிற்றேடுகள் :<br>மனத்தைக் கவரும் மாணிக்கப் பரல்கள்<br>வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம்<br>உள்ளத்தைத் தொடும் உணர்ச்சி ஓவியங்கள்<br>உள்ளங்கள் ஒன்றிடும் அன்றிற் பறவைகள்<br>(இவை நான்கும் குறுந்தொகை அரும்புகள் என ஒரே நூலாக வெளிவந்துள்ளன.) | | "<br>" | 2009 |
| 71. | தமிழ் உயிருள்ள மொழி | தினமணிக் கட்டுரை | மீனாட்சி புத்தக நிலையம் | 2005 |
| 72 | தமிழ்வழிக் கல்வி (சிற்றேடு) | கலைஞருக்கு மடல் | தமிழ்ச்சான்றோர் பேரவை சென்னை | 2000 |
| 73 | தமிழ்வழி - வழிபாடும் குடமுழுக்கும் (சிற்றேடு) | கட்டுரை | திருச்சிராப்பள்ளி தமிழ்வழிவழிபாடு கருத்தரங்கு | 2002 |
| 74 | சங்கப் பூந்துணர் (சிற்றேடு) | சங்கப்பாடல்கள் | சங்கத் தமிழ்க் கழகம் | 2009 |
| 75 | தமிழ் இலக்கியத்தின் தொன்மை அகச் சான்றுகள் | ஆய்வு | சென்னை 'நோக்கு' வெளியீடு | 2008 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 76. | இது என்ன சிரிப்பு | ஓரங்க நாடகம் | சுதர்சன் & கோ, தேவகோட்டை | 1948 |
| 77. | அனிச்ச அடி, ஆய்வுரை பாவலர் மணி ஆ.பழநியின் கவிதை நாடகம் | நாடக ஆய்வுரை | தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம் (சிற்றேடு) | 1973 |
| 78. | மனத்துக்கு மனம் | வாழ்க்கைக் குறிப்பு | மீனாட்சி புத்தக நிலையம் | 2010 |
| 79. | தமிழர் சமயமும் சமஸ்கிருதமும் | ஆய்வு | | 2011 |
| 80 | தொல்காப்பியர் விளக்கும் திருமணப் பொருத்தம் | கட்டுரை | தமிழ்ப் பேராயம், திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம் | 2013 |
| 81. | கபிலர் பாடல்களில் காட்சி உருவகம் | ஆய்வு | சிந்தாமணி வெளியீடு | 2013 |
| 82. | தமிழ் நான்மறை விளக்கம் | ஆய்வு | மீனாட்சி புத்தக நிலையம் | 2015 |
| 83. | தமிழண்ணல் தமிழுக்குத்தந்த சீர்வரிசை | வரலாற்றுக் குறிப்பு | ” | 2015 |
| 84. | திருமுறைகள் உணர்த்தும் மறைபொருள் உண்மைகள் | ஆய்வு | ” | 2015 |

## 13. கட்டுரைகள்

கட்டுரைகள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து, மணிவாசகர் நூலகம் மெய்யப்பன் பதிப்பகச் சார்பில் 12 நூல்களாக 2008இல் வெளியிடப்பட்டன.

**நூல்கள்** **கட்டுரைகள்**

**1. செம்மொழிப் படைப்பியல்**

1. சங்க இலக்கியம் - மனவுணர்வுப் படப்பதிவு
2. அஞ்சியின் 'திருவுரு'
3. அடிகளின் 'அரசுரு'
4. அடிகளின் அரசவுள்ளம்
5. ஓவிய வரையில் உணர்ச்சி வண்ணங்கள்.
6. கருத்துக் குவிவும் காட்சிப் பதிவும்
7. திரைப்படமாகும் கவிதைக் காட்சிகள்
8. பாட்டு வயல்பரப்பில் நுண்ணுணர்வுப் பதியங்கள்
9. திருத்தக்கதேவரின் படிமக் காட்சிப்படைப்பு
10. ஒளவையார் பாடல்களில் வடிவமைப்பும் நடைத்திறனும்
11. ஒப்பீட்டு நோக்கில் முல்லை நிலப்பாடல்கள்

**2. செவ்விலக்கியச் சிந்தனைகள்**

12. உலகம் அவாவும் பேரிலக்கியம்
13. சங்க இலக்கியமும் தமிழரும்
14. சங்க இலக்கியம் பயிலுதலும் - பயிற்றுதலும்
15. சங்க இலக்கிய வழி வாழ்வியல் விழுமியக் கல்வி
16. பத்துப்பாட்டுத் திறன்
17. தமிழ்ப் பேரறிஞர் மா.இராசமாணிக்கனாரின் பத்துப்பாட்டு ஆராய்ச்சி
18. குறிஞ்சிப் பாட்டு

19. சங்க கால மரபுகள் - அன்றும் இன்றும்
20. ஒப்பிலக்கிய நோக்கில் சங்க இலக்கியம்
21. அகப்பாடல்களும் யாப்புக் கோட்பாடுகளும்
22. சங்க இலக்கியம் - பாட்டு வடிவமும் யாப்பும்

3. ஒப்பிலக்கியப் பார்வையில் சங்க இலக்கிய ஒளிச்சுடர்கள்

23. ஒப்பிலக்கியம் என்பதுதான் என்ன?
24. ஒப்பிலக்கியத்துறையின் வரலாறும் தெரிய வேண்டுமே
25. ஒப்பியலாய்வு எத்தனை படிகளில் ஏறி உயர்ந்தது?
26. சங்க இலக்கியக் கொள்கைகளும் பண்பாடும்
27. 'நோக்கு' - ஒரு தமிழ் முறைத் திறனாய்வு
28. 'நோக்கும்' - திருக்குறளில் நோக்கும்
29. குறுந்தொகையில் முன்னம்
30. குறுந்தொகையில் இறைச்சி
31. 'உள்ளுறை'யின் உள்ளுறை யாது?
32. திருத்தக்கதேவரின் படிமக்காட்சிப் படைப்பு
33. சங்க இலக்கியத்தில் தொன்மம்
34. தொன்மைமிக்க தமிழ்த் தொன்மம்

4. தொல்காப்பிய இலக்கிய இயல்

35. தொல்காப்பியப் பொருளதிகாரம்
36. தொல்காப்பிய இலக்கிய இயல்
37. தமிழ் இலக்கிய இயல் - அடிப்படை நெறிகள்
38. வீரயுகமும் சங்க காலமும்
39. தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கிய வகைமைப் பண்புகள்
40. தமிழ் இலக்கிய வகைகள்
41. சிற்றிலக்கிய வித்துக்களும் விழுதுகளும்
42. தொல்காப்பியரின் அடிக்கோட்பாடு
43. தொல்காப்பியரின் பார்வையில் அகத்திணை
44. முன்னத்தின் உணரும் கிளவி
45. புரைதீர் கிளவி

46. படைப்பிலக்கியங்களில் மனித நேயம்
47. இலக்கிய மரபு
48. அக இலக்கிய மாந்தர் படைப்பு - தலைமகன்
49. அக இலக்கிய மாந்தர் படைப்பு - தோழி

5. தமிழை அறிவோம்
தமிழராய் வாழ்வோம்

50. புலி பூனையாக முடியுமா?
51. நமக்கு ஆங்கிலம் வேண்டாமா?
52. வடமொழி தமிழர்க்குப் பகையா ?
53. தமிழைத் தெரிந்து கொள்வோம்
54. வாக்கிய அமைப்பின் அடிப்படை
55. ஆகுபெயர்
56. வேற்றுமை
57. வேற்றுமை, அல்வழி
58. திணை பால் எண் இட இயைபு
59. பிரித்தெழுதுதல், சேர்த்தெழுதுதல்
60. சந்தி - ஒற்றெழுத்து மிகுதல்
61. தமிழ்ச் சொல் கட்டமைப்பு
62. நான்கு வகைத் தமிழ்ச் சொற்கள்
63. மொழி முதல் எழுத்துக்கள்
64. மொழியிறுதி எழுத்துக்கள்
65. சார்பெழுத்துக்கள்
66. மெய்ம் மயக்கம்
67. பிறமொழிச் சொற்கள்
68. உலக வழக்கும் செய்யும் வழக்கும்

6. தமிழ் ஒரு கட்டமைப்புள்ள மொழி

69. தமிழ் உயிருள்ள மொழி
70. தமிழ் ஒரு கட்டமைப்புள்ள மொழி
71. சாரியைகளின் பயன்பாடு

72. ஙப் போல் வளை
73. கருங்கயற்கண் விழித் தொல்கி நடந்தாய் வாழி காவேரி
74. தமிழைத்தளரவிடலாமா?
75. தமிழனின் தலையெழுத்தும் தமிழின் தலையெழுத்தும்
76. தலையெழுத்தாகித் தடுமாற வைக்கும் ஆங்கிலமே
77. தலையெழுத்தில் தடுமாற்றமும் தமிழ் ஊற்றமும்
78. தமிழின் எதிர்காலம் – ஒரு தொலைநோக்குப் பார்வை

**7. இனிய தமிழ்மொழியின் இருவகை வழக்குகள்**

79. பயன்பாட்டுத் தமிழ் வளர்த்த பாவலர்
80. பாடிப் பறந்த பறவை
81. தமிழின் இருவகை வழக்கு:
இலக்கணத்தில் இதுவே முதற்பாடம்;
முதன்மைப் பாடம்
82. மொழி ஆராய்ச்சியும் உலக வழக்குப் பயன்பாடும்
83. தமிழ்மொழியின் இருவகை வழக்கு
84. அழகைக் குறிக்க ஆயிரம் சொற்கள்
85. பறைசாற்றலும் விலை பகர்தலும்
86. காக்கை கரையும், கூகை குழறும், குயில் கூவும்
87. நீங்கள் கருப்பா? கறுப்பா? சொல்லுங்கள்
88. திறனறிந்து சொல்லுக சொல்லை
89. வினைச் சொல்
90. திருவேங்கடத்தான் ‘வெங்கட்’ ஆனதேன்?
91. ‘இன்னும் இன்னமும்’
92. முனை முரிந்ததும் மரக்கிளை முறிந்ததும் ஏன்?
93. காதலி என்னைக் காதலி

**8.தேட வைக்கும் திருவள்ளுவர்**

94. திருக்குறள் கற்கும் நெறிமுறைகள்

95. திருக்குறள்-உலகின் முதல் தன் முன்னேற்றச் சிந்தனை நூல்
96. தமிழிய வள்ளுவம் – இறைவழி பாட்டு மறுமலர்ச்சி
97. வழிகாட்டுமா வள்ளுவப் பெண்ணியம்
98. காமத்துப்பால் – பாலியல் வாழ்வின் பயிற்சிக்களம்
99. வடவர் சாற்றிய தவமும் வள்ளுவர் போற்றிய தவமும்
100. வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும்
101. புரைதீர் கிளவி
102. வள்ளுவர் வகுத்த தமிழர் இயக்கம்
103. மாணிக்க வள்ளுவம்
104. திருக்குறள் – செல்வம்
105. திருக்குறள் – அறிவு
106. திருக்குறள் – அறம்
107. குறள்நெறி – பொருள் செயல் வகை
108. திருக்குறள் – ஒற்றாடல்

**9. வள்ளுவர் நெறியில் வாழ்வது எப்போது?**

109. வள்ளுவர் காட்டும் வாழ்வியல்
110. திருக்குறள் வாழ்க்கை நூல் ஆவது எப்போது?
111. திருக்குறள் தமிழரின் அடையாளம்
112. திருக்குறள் மூலபாடத்தைச் சிதைப்பது கொடுமை
113. தமிழர் திருமுறையைச் சிதைப்பது அறமாகுமா?
114. எந்தத் திருக்குறளை இந்தியத் தேசிய நூலாக்குவது?
115. கீதை நம் வழிகாட்டி நூலாகுமா?

**10. தமிழ்வழிக் கல்விச் சிந்தனைகள்**

116. ஒரு தமிழ் மகனின் வழக்குரை
117. நர்சரிப் பள்ளிகளின் ஆதிக்கம்
118. தமிழ்வழிப் பொறியியல்
119. மழலையர் பள்ளிகள் மறு சீரமைப்பு
120. மழலையர் தமிழ்வழிக் கல்வி

121. தமிழ்வழிக் கல்விக்கும் ஒரு பல்கலைக் கழகம்
122. தமிழனின் தாழ்வு மனப்பான்மை
123. செக்கைச் சுற்றும் மாடுகள்
124. வளைந்து போன முதுகு
125. தேவை கல்விச் சமத்துவ நீதி
126. சுதந்திர நாட்டில் தாய்மொழி
127. உலகம் எங்கும் தமிழ் உதவிமையம்
128. தமிழுக்குப் பொற்காலம் ஆகுமா?
129. ஒரு பக்கப் பார்வை
130. புலம் பெயர்ந்த தமிழர்களும் தமிழும்
131. நூலகமே கோயில், நூல்களே தெய்வங்கள்
132. தமிழ்வழி உயர்கல்விக்கு முன்னோடி
133. அடிமை இந்தியாவில் ஒரு சுதந்திரக் குடிமகன்
134. ஆங்கிலத்திற்கு நாம் எதிரிகள் அல்லர்
135. கனவு பலிக்குமா?
136. மொழிக் கொள்கையில் ஒரு தெளிவின்மை
137. தீராப்பெருங்கவலை
138. சுதந்திர நாட்டின் அடிமைச் சின்னம்
139. முதலில் தமிழ்; பிறகு சீர்திருத்தம்
140. மனமிருந்தால் வழி பிறக்கும்
141. தமிழுக்கு ஏன் தயக்கம் ?
142. எளிமையாய்த் தொடங்கி இமயத்தை அடையலாம்
143. தழைக்கட்டும் தாய்த்தமிழ்ப் பள்ளிகள்
144. தமிழ் யாருக்குச் சொந்தம்
145. தாருங்கள் தமிழ்ஒளித்திட்டம்
146. வழிகாட்டுகிறது கருநாடகம்
147. தமிழ்வழிக் கல்விக்கு விடிவெள்ளி
148. விழித்தால் மட்டுமே விடிவு
149. தாழ்ந்துவரும் தமிழிலக்கியக் கல்வி

11. ஊடகங்களால் ஊரைப்பற்றும் நெருப்பு

150. பொதுநலத்தில்குப்பை கொட்டும் இந்தியன்
151. ஊடகங்களால் ஊரைப் பற்றும் நெருப்பு
152. வீட்டுக்கு நெருப்பு வைக்கும் வேலை
153. சின்னச் சின்ன நடைமுறை நாகரிகம்
154. நமது மேடை நாகரிகம்
155. நாய்களைஅவமானப்படுத்தாதீர்
156. ஒரு பண்பாட்டின் சின்னம்
157. வாடிக்கையாளர்களுக்காக நாம்
158. முன்னேறும் காலம் எது?
159. மக்களாட்சியில் மக்களின் பங்கு
160. அரசும் அதிகாரமும் மக்களுக்காகவே

12. எழுச்சி தரும் எண்ணச்சிறகுகள்

161. யாழும் இசையும்
162. இசைக்கலையின் உச்சத்தைத் தொடும் நாகசுரம்
163. தாய்மை தந்த தாலாட்டு இலக்கியம்
164. சுதந்திரத்துக்குப்பின் கவிதை
165. வள்ளலாரின் இறைக் கொள்கை
166. சமயமும் ஒழுக்கமும்
167. திரு.வி.க.வும் திராவிட இயக்கமும்
168. அறுபது ஆண்டுகளில் கவிதை நாடகங்கள்
169. காலத் தராசில் பாரதியார் கருத்துக்கள்
– தமிழ் மொழியின் எதிர்காலம்
170. பாரதி காட்டிய வழி – பக்தியில் தன்னம்பிக்கை
171. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பாரதி
172. பாரதியாரின் கண்ணன் பாட்டு
173. அகிலனின் சிறுகதைகளில் உளவியல் பாங்கு
174. திருவிளையாடல் முன்னோடி
175. இளைஞர்களே! எழுச்சி கொள்ளுங்கள்!

176. குறள் வைப்புமுறை பற்றி ஒரு குறிப்பு

177. தமிழ் இலக்கியத்தில் மகளிர் பற்றிய ஆய்வுகள்

178. இலக்கியத்தில் அம்மன் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

179. முருகனின் அழகும் சீற்றமும்

180. வழித்துணை முருகன்

181. ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவது எப்படி?

182. திணை துறை கூற்று பொருள் அறிமுக விளக்கம் அரிமா நோக்கு சனவரி 2009

183. Literary Heritage of South India - A Historical Perspective அரிமா நோக்கு ஏப்பிரல் 2008

184. Imagery in Kapilars poems அரிமா நோக்கு அக்டோபர் 2008

185. Literary Theories in Tamil and Sanskrit

186. Tholkappiyar's Theory of Poetics

187. Indian Heritage on the concept and practices of Managerical Effectiveness (With Special Reference to ancient Tamil Literature and Thirukkural)

188. செய்தக்க அல்ல செயக்கெடும்

189. இரட்டை வாழ்வு

190. இந்திய விடுதலை இயக்கத்தில் மேடை நாடகப் பாடல்கள் – 41 பாடல்கள் – சாகித்திய அகாதெமி, பொன் – சௌரிராசன் தொகுப்பு

191. திருவள்ளுவர் உணர்த்தும் மனித மனம் திருக்குறளில் பொதுமை – க.சி.அகமுடைநம்பி தொகுப்பு 2008

192. திருக்கார்த்திகையும் தீபாவலியும்

193. தமிழ் 'அரசு' – இரண்டும் சமஸ்கிருத ஆதிக்கமும் என்னும் பெரியார் திறந்த நிலைப் பல்கலை வெளியீடு

194. தை முதல் நாளே தமிழரின் புத்தாண்டு

195. தொல்காப்பியர் காலம், உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவை

196. தமிழ் மொழி வழங்கிய இசைச் செல்வம் மு.அருணாசலம் எழுதிய தமிழ் இசை இலக்கிய வரலாறு தமிழ் இசை இலக்கண வரலாறு பதிப்பாசிரியர் உல. பாலசுப்பிரமணியன் இருநூல்களின் மதிப்புரை தமிழ் இலெமூரியா, அரிமா நோக்கு முதலான இதழ்களில் வெளிவந்தது.

197. கபிலர் பாடல்களில் தனித்திறன்

198. செறுநரும் விழையும் செம்மல் – அண்ணா நூற்றாண்டு விழா மலர்

199. சங்கத் தமிழில் செவ்வியல் மாண்புகள் கோவை உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டுமலர்

200. சங்க இலக்கியத்தில் செவ்வியல் பண்புகள் தினமணி, செம்மொழிக் கோவை.

## பதிப்பு

1. சொ. முருகப்பா மணிவிழா மலர்
2. புதுக்கோட்டை அண்ணலார் மணிவிழா மலர்
3. சுப.அண்ணன் சதாபிசேக மலர்
4. 'வையை' I, II ம.கா.பல்கலை 1974, 75
5. 'பொதிகை' I, II ம.கா. பல்கலை 1979, 1980
6. அகிலன் கருத்தரங்கம், ம.கா. பல்கலை

## 14.கவிதைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வம் – செல்வமென்னும் காதலியே! | திருச்சி தில்லி வானொலிகள் | 1971 |
| 2. | மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ் | காரைக்குடி, இராமசாமி தமிழ்க் கல்லூரி ஆறுதல் பரிசு | 1975 |
| 3. | 'மீனாட்சி' 101 – அடிப்பாடல் முதற்பரிசு | தமிழ்நாடு அறநிலையத் துறை ஆணையம் | 1973 |
| 4. | தமிழ்த்தாய் – திருஅம்மானை | கம்பனடிப் பொடி தொகுத்த தமிழ்த்தாய் பிரபந்தம் – வெளியீடு | 1993 |
| 5. | வாழ்க்கைக்கு வெற்றி தரும் வழி பாட்டுப்பாடல்கள் | தொகுப்பு – தன் பாடலும் உளது | 2003 |
| 6. | கண்ணகி நோன்பு கண்ணகி வணக்கம் | | 2004 |
| 7. | தாலாட்டு | தாலாட்டுத் தொகுப்பில் உளது மேலும் பல கட்டுரைகளும் கவிதைகளும் தொகுக்கப்பட வேண்டும். | 1956 |
| 8. | தமிழண்ணலின் பொற்கிழிக்கவிதைகள் | அச்சில் | |

இதை தவிர பல துறைகளில், இதழ்களில், மலர்களில் வெளிவந்த இலக்கிய இலக்கணக் கட்டுரைகள் மேலும் பல. அவை தொகுத்து அச்சிடத்தக்கவை. தமிழ்வழிக் கல்வியை வற்புறுத்தி எழுதியவை நூற்றுக்கணக்கினவாகும். அவை தனிநூலாகும் தகுதியுடையவை.

## 15. இராம . பெரிய கருப்பன் தமிழண்ணல் வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | பெரிய கருப்பன் |
| தாயார் அழைத்த செல்லப் பெயர் | : | சிங்காரம் |
| புனை பெயர் | : | தமிழண்ணல் |
| பிறப்பு | : | 12.08.1928 |
| இடம் | : | நெற்குப்பை, சிவகங்கை மாவட்டம் |
| இன்றைய வாழ்விடம் | : | ஏரகம்<br>4/585(732) சதாசிவ நகர்,<br>முதன்மைச் சாலை, வண்டியூர் வழி,<br>மதுரை -625 020. |
| பிறந்த ஊர் முகவரி | : | 12, தெற்குத் தேர்த்தெரு, நெற்குப்பை<br>சிவகங்கை மாவட்டம் 630 405. |
| மரபு | : | இளையாத்தக்குடி, கழனிவாசற்குடி |
| பிள்ளை கூட்டிக் கொண்டு<br>பால் மணம் மாறாப்பாலகன் முதல் | : | கலியாணி ஆச்சி, |
| வளர்த்த பெற்றோர் | : | அரு.மு.இராமசாமிச் செட்டியார் |
| பெற்றெடுத்த பெற்றோர் | : | பார்வதி ஆச்சி<br>தெ.சு.மு.முத்துராமன் செட்டியார் |
| மனைவி | : | சிந்தாமணி |
| மனைவியின் பெற்றோர் | : | சிகப்பி ஆச்சி<br>நா.பழ.நா.நாச்சியப்ப செட்டியார் |
| தமிழண்ணல் – சிந்தாமணி<br>திருமண நாள் | : | 30.8.1954 |
| தெய்வத்தமிழ் நெறியில் திருமணம்<br>செய்து வைத்தவர் | : | கம்பனடிப்பொடி சா.கணேசன் |
| வாழ்த்தரங்கத் தலைவர் | : | சீர்திருத்தச் செம்மல் சொ.முருகப்பா |
| துணை நின்று நடத்தி வைத்தவர் | : | கவியரசு முடியரசன் |

## 16. படிப்பில் படிப்படியாய் ஏறிய படிகள் கல்வி

| | | | |
|---|---|---|---|
| 1. | அகவை 5 முதல் 12 வரை பள்ளிப்படிப்பு | ஏழாம் வகுப்பு 1940 முடிய | நெற்குப்பை திண்ணைப் பள்ளிக் கூடங்கள் |
| 2. | எட்டாம் வகுப்பு (III Form) | 1941-'42 | பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார் உயர்நிலைப் பள்ளி |
| 3. | பள்ளி இறுதி வகுப்பு | 1952 | தனிப்படிப்பு |
| 4. | வித்துவான் (2D) | 1942-1948 | மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, திருவையாறு, அரசர் கல்லூரி |
| 5. | இடைநிலை வகுப்பு Intermediate 'D' Group | 1952 - 53 | தனிப்படிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம் |
| 6. | இளங்கலை பொருளியல் (B.A., Economics) | 1954-1958 | தனிப்படிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம் |
| 7. | முதுகலை (தமிழ்) | 1960 | தனிப்படிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| 8. | முனைவர் (Ph.D.,) | 1969 | தியாகராசர் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் தலைப்பு : சங்கப் பாடல்களில் இலக்கிய மரபுகள் (Literary Convertions in Cankam Poetry) |

## 17. பணி நிலைப் படிநிலைகள்

| | பணி நிலை | நிறுவனம் | ஆண்டு |
|---|---|---|---|
| 1. | தமிழாசிரியர் | மகாசன உயர்நிலைப் | 1948-49 (ஓராண்டு) |
| 2. | முதனிலைத் தமிழாசிரியர் | ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப்பள்ளி, | 1949-61 (12 ஆண்டுகள்) |
| 3. | தமிழ் விரிவுரையாளர் | தியாகராசர் கல்லூரி, மதுரை. | 1961-1971 (10 ஆண்டுகள்) |
| 4. | தமிழ் விரிவுரையாளர் | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1971-1973 (இரண்டாண்டுகள்) |
| 5. | தமிழ் இணைப் பேராசிரியர் (Reader) | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1973-1975 (இரண்டாண்டுகள்) |
| 6. | அஞ்சல் வழிக் கல்வித் துறை – தமிழ்த்துறை | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1975-1980 (நான்கு ஆண்டுகள்) |
| 7. | தமிழியல் துறைத் தலைவர் | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1980-89 (ஒன்பது ஆண்டுகள்) |
| | (இந்திய மொழிப்புல ஒருங்கிணைப்பாளர்) | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | முதல் இரண்டாண்டுகள் மட்டும். |
| 8. | தமிழியற்புலம் பணி நிறைவு சிறப்புப் பேராசிரியர் | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1989 சூலை முதல் திசம்பர் வரை. |
| 9. | சிறப்பு நிலைப் பேராசிரியர் | பல்கலைக்கழக நல்கைக்குழு (UGC) | 1990-1992 (இரண்டாண்டுகள்) |
| 10. | தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் குறள் பீடம் | தமிழ்நாடு அரசு | 2000 (ஓராண்டிற்குள்) |

## 18. சிறப்புக்கள்

1. நெற்குப்பை பாரதி பாடல் போட்டியில் முதற்பரிசு 1939
2. சி.பா.ஆதித்தனாரின் 'தமிழன்' இதழில் பரிசு
3. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் வழங்கிய 'கணக்காயர்' மெய்க்கீர்த்தி விருது 1972
4. 'மீனாட்சி' -101 அடிகள் கொண்ட பாடலுக்குத் தமிழக அரசு வழங்கிய பரிசு 1973
5. தமிழக அரசின் திரு.வி.க.விருது 1989
6. தமிழக அரசின் நல்லாசிரியர் விருது (1981 -82க்கு) 1986
7. தமிழக அரசின் சிறந்த நூற்பரிசு - முனைவர் பட்ட ஆங்கில ஆய்வேட்டிற்கு முதற்பரிசு, நச்சுவளையம் நாவலுக்கு இரண்டாம் பரிசு 1982
8. மதுரைத் திருவள்ளுவர் கழகம் - தொல்காப்பியச் செம்மல் விருது 1994
9. திருவாவடுதுறை ஆதினம் - மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நினைவுப் பரிசில் 1995
10. திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் - திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நூற்றாண்டு நினைவுப்பரிசும் தமிழ் மாமணி விருதும் 1997
11. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் பேரவைத் தமிழ்ச் செம்மல் விருது (1997க்கு) 1998
12. பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பர், பவளவிழா, 'தமிழியக்கச் செம்மல்' விருது 2003
13. சென்னை, கம்பன் கழகம் தந்த பாராட்டு 1998

14. கோவிலூர்த் திருமடம் – சீர்வளர்சீர் நாச்சியப்ப அடிகளார் வழங்கிய 'அறமனச் செம்மல்' விருது 2002

15. தில்லி, பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் (UGC) தேசியப் பேராசிரியர் விருது 1981-82

16. மதுரை, தமிழிசைச் சங்கம் அரசர் முத்தையவேள் 104ஆம் பிறந்த நாளில் தந்த பரிசளிப்பு 2008

17. தமிழக அரசு வழங்கிய 'கலைமாமணி' விருது 2011

18. தென்னிந்தியப் புத்தகப் பதிப்பாளர் சங்கம் வழங்கிய 'கலைஞர் இலக்கிய விருது' 2012

19. திரு. இராமசாமி நினைவுப் பல்கலைகழகம் சார்ந்த தமிழ்ப் பேராயம் அதன் துணைவேந்தர், தலைவர் மு.பொன்னவைக்கோ வழங்கிய பாரிவேந்தர் பைந்தமிழ் விருது 2014

20.தமிழ்ச் செம்மொழி ஆய்வு மையம், (நடுவண் அரசு நிறுவனம்) தேர்ந்தெடுத்து, குடியரசுத் தலைவர் வழங்கிய 'தொல்காப்பியர் விருது' 2014

21. உலகத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் உலகத்தமிழர் தலைவர் பழ.நெடுமாறன் வழங்கிய 'உலகப் பெருந்தமிழன்' விருது 2015